# ஸ்ரீ அன்னையின் சக்தி

*(டி. ஆர். துளசிராம், ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம்)*

இன்று ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து அன்னை மஹாசமாதி அடைந்த நன்னாள். (நவம்பர் மீ 17—1973). பாரிஸ் மாநகரத்தில் 1878ல் பிறந்த அவர் இந்தியாவிற்கு வந்து 1920 முதலாக ஸ்ரீ அரவிந்தருடன், உலகியலும், ஆன்மீகமும் இணைந்த பூரண யோக வாழ்வை, மேற்கொண்டார். அரவிந்த ஆசிரமத்தை, அதன் பூரா நிர்வாகத்தையுமேற்று சீடர்களின் புறவாழ்வு மற்றும் யோக வாழ்வுத் தேவைகளையும் கவனித்து வந்தார். அவரிடம் சிறு வயது முதலாக தெய்வீகத் தன்மை விளங்கி வந்தது. ஸ்ரீ அரவிந்தர் ''அன்னை'' என்னும் தம் நூலில் ஆசிரமத்து அன்னையை ஆதிபராசக்தி சொரூபம் எனவும், மகாசரஸ்வதி, மகாலட்சுமி, மகாகாளி, மகேஸ்வரி இணைந்து விளங்கும் உலக மகா சக்தியாகவும் வெளிப்பட்டு செயல்படுகிறார் என்றும் அறிவித்தார். ஆனால், தம்மையும், அரவிந்தரையும் பின்பற்றுவோர்களுக்கும் மற்றும் சீடர்களுக்கும், ஆசிரமத்து சர்வதேச கல்வி நிலையத்தில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கும், குழந்தைகளுக்கும் அவர் பேரன்பு அருளும் தாயாகவே விளங்கி ஒவ்வொருவரிடமும் மிக நெருக்கமாக பரிவோடுப் பழகி வந்தார். அன்பின் பிணைப்பால் நம்மை தெய்வத்தின் பால் இட்டுச் சென்றார்.

அன்னை மானிட வாழ்வு ஏற்று உலகத்தில் தெய்வீக விஞ்ஞான ஜோதி என்னும் சத்திய ஜோதியைக் கொண்டு வருவதற்காகவே தவம் ஆற்றி வந்தார். இதுபோன்ற லட்சியம் கொண்டு திரு அருட் பிரகாச வள்ளலார் உலகில் அருட்பெருஞ் ஜோதியைக் கொண்டு வருவதற்கான அருட் பணியை 19வது நூற்றாண்டில் மேற்கொண்டார் என்பது நினைவு கூறலாம். அன்னையும் மரணமிலாப் பெருவாழ்வு இலக்காகக் கொண்டு, புத்தி, மனம், உள்ளம், பிராணன், இந்திரியங்கள், பூதஉடல் ஆகியவற்றை விஞ்ஞான ஜோதியால் நிரப்பி ஒளிமயமாக்கி அவற்றை தெய்வீகத் தரமாக மாற்றி அமைப்பதில் மிகமிக ஈடுபட்டார். இதனால் சீடர்களும் ஆன்மீகப் பாதையில் மிகவும் முன்னேற வழி பிறந்தது. சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் இது ஒரு புது இலட்சியமாக அமைந்தது.

ஸ்ரீ அரவிந்தரின் இலட்சியமும் இதுவே. அதை அன்னை 1956ல் நிறைவேற்றினார். இவ்வுலகு பூராவுக்கும் திவ்ய விஞ்ஞான ஜோதியைக் கொண்டு வந்தார். ஆண்டவர் தமக்கு இட்ட பணியையும் நிறைவேற்றினார். 1956 பிப்ரவரி 29ந் தேதி அன்று மாலையில் ஸ்ரீ அன்னை கூட்டுத் தியானத்தில் இருந்த சமயம் விஸ்வப் பிரபஞ்சத்தைக் காட்டிலும் பெரியதொரு பொன்னுருவம் எடுத்து, இவ்வுலகை ஆண்டவரிடமிருந்து பிரித்து மறைத்து நின்ற பிரம்மாண்டமான பொற்கதவை எதிர் நோக்கி நின்றார். ''தருணம் வந்து விட்டது'' என ஆண்டவரின் குரலைக் கேட்டார். உடனே ஒரு பெரிய பொன் சம்மட்டி எடுத்து தன் கரங்களால் ஓங்கி அடித்தார். அக்கதவு சுக்கல் சுக்கலாக நொறுங்கியது. அதுமுதலாக இடைவிடாது தெய்வீக விஞ்ஞான ஜோதியும் அதன் உணர்வும் சக்தியும் ''சூபர்மைண்டு'' என்னும் சத்திய ஞான உலகிலிருந்து அல்லது ஞான சிதம்பர வெளியிருலிந்து இப்பூமிக்கு நேரடியாக வெள்ளமெனப் பாய்ந்து இறங்கிக் கொண்டிருக்கிறது. அன்னையும் உலகுக்கு உவகையுடன் செய்தி விடுத்தார். ''இறைவனே நீ உன் திருவுளம் தெரிவித்தாய். நான் நிறைவேற்றுகிறேன். புதியதோர் ஜோதி இப்பூமிக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது. புதியதோர் உலகும் பிறந்திருக்கிறது. வாக்களிக்கப்

பட்டவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன.'' வாக்களிக்கப்பட்டவை பற்றி அன்னை மேலும் விளக்கினார். சென்ற காலங்களிலும் மகான்கள் புதிய உலகும் புதிய மனித இனமும் வருமென வாக்களித்திருக்கிறார்கள். இவை இன்று நிறைவேற்றப்படுகின்றன என்றார். ஜோதியால் வள்ளல் பெருமானின் உடலில் தெய்வீகத் தரமான மாற்றங்கள் ஏற்பட்டதைத் தெரிவித்தபோது இச்சோதியை வள்ளலார் அருட்சோதியென அழைப்பதை அன்னை பெரிதும் விரும்புவதாகவும், வரவேற்பதாகவும் அறிவித்து தமக்கும் அருட்ஜோதியின் அனுபவம் ஏற்பட்டதாகச் சொன்னார்.

தத்துவங்களின் பரிணாமக் கிரமத்தின் படி ஜட அஞ்ஞான இருளிலிருந்து ஜடப்பொருளும் அதிலிருந்து பிராண உயிரும், உயிரிலிருந்து மனமும், மனத்திலிருந்து புத்தியும், படிப்படியாக வெளிப்பட்டுள்ளன. ஆன்ம அணு அல்லது ஆன்ம உயிர் இவற்றின் பின்னணியில் மறைவாக இருந்து இவைகளை ஊக்குவித்து தானும் வளருகிறது. விஞ்ஞான அருட்ஜோதியின் வருகையால் இனி புத்தியிலிருந்து சத்திய ஞானமும் வெளிப்பட்டு ஆன்மாவின் மூலம் நேரடியாகவும், புத்தியின் மூலம் மற்றுமுள்ள கீழ் தத்துவங்களையெல்லாம் தெய்வீகத் தரமாக மாற்றியமைக்கும். மனோ உயிருடல் கொண்ட மனிதனில் இச்சோதி இனி செயல்பட்டு தெய்வீகப் பரிணாமக் கிரமமான வளர்ச்சியை அமைக்கும். மனோ பிராண உடல் ஆகியவற்றின் உணர்வுகள் புதியதொரு ஆக்க சக்தியையும் பொலிவையும் பெற்று புதிய வளர்ச்சியையும் முன்னேற்றமும் அமைப்பில் உருமாற்றமும் அடையும் என்பதாகும். இது வெளிப்படையாகத் தெரிவதற்குக் காலம் பிடிக்கலாம்.

வளரும் குழந்தைக்கு உடலுறுப்புகளும் பொறிபுலன்களும் உள்ளமும் மனதும் புத்தியும் அதனதன் உணர்வுகளும் அறிவுகளும் சக்திகளும் காலக்கிரமத்தில் இயல்பாகவே வளர்ந்து வருகின்றன. அவையெல்லாம், கடைசியாக வெளிப்படும் மனோ புத்தித் தன்மைகளை, ஒருவாறு கிரகித்து மாறுதலடைகின்றன. இதுபோல, இனி வருங்காலத்தில் இத் தெய்வீக அருட் சோதி இப்பூமியின் உணர்வில் கலந்து செயல்படுவதால் இப்போதுள்ள மனித இனத்திலிருந்து புதிய இனம் அதாவது புது இனக் குழந்தைகள் பிறக்கும். மேற்சொன்ன வகையில் உடல் - பிராணன் - மனம் - புத்தி வளர்ச்சியடைவதுடன் நின்றுபோகாமல், அஞ்ஞான நிலைகளிலேயே உழன்று கொண்டிருக்காமல், அவற்றைக் கடந்து மேலும் தவறாமல் வளர்ந்து மேனிலையுற்று படிப்படியாக உள்ளத்திலாவது சிரத்திலாவது ஆன்மாவின் கதவுகள் திறக்கப் பெறும். அப்போது தெய்வீக ஞான சக்திகள் சம்பந்தப்பட்ட மனோ பிராண உடல் நிலைகளை படிப்படியாகவே இயல்பாகவே அடைவார்கள். இது வருவது நிச்சயம். பக்குவமுள்ளவர்கள் இப்போது கூட யோகத்தாலும் இச்சோதியின் பரிணாமக் கிரமச் செயலாலும் பிணி மூப்பு மரணம் வென்று மரணமிலா நித்ய இன்ப வாழ்வு இவ்வுலகிலேயே அடைவர்.

இனி, இதன் நடைமுறை சாத்தியக் கூறுகளையும் அன்னையிடம் தொடர்பு கொள்ளும் வழிமுறைகளையும் ஆராய்வோம். உயரிய தெய்வீக அருட்ஜோதி அன்னையை 15-8-1964 நாளன்று ஆட்கொண்டு, அவர் உடலிலும், சூழ்புறத்திலும் அதன் சக்தியை நிரப்பிப் பரப்பியது. அதிர்ஷ்டவசமாக இத்தருணத்தில் அவருடைய புகைப்படம் ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது. அதில் அன்னை கை கூப்பியவண்ணம் நாற்காலியில் அமர்ந்த நிலையில் விளங்குகிறார். ''பேருண்மையின் வருகைக்கு என் வணக்கம்'' என கைகூப்பித் தொழுத-

வண்ணமாய் இருக்கிறார். இம்மந்திர சக்தி வாய்ந்த சொல்லை நாமும் சொல்லி அன்னையை நினைந்தால் அல்லது இப்படத்தில் அவர் கண்களில் பார்த்தால் அருட் ஜோதியின் சக்தி நம் மனோ பிராண உடல் உணர்வுகளில் ஏதேனும் ஒருவகையில் செயல்படுவதை நாமும் உணரலாம். தியானப் பயிற்சி உள்ளவர்களுக்கு தியான உணர்வு ஆழமாக இட்டுச் செல்லும். அது அமையாதவர்களுக்குக் கூட தியான உணர்வையும் விழிப்பையும் தந்து படிப்படியாக யோக சக்தியை வளர்க்கும்.

ஒவ்வொரு மாதமும் வரும் புனர்பூசம், பூசம் நட்சத்திர நாட்களில் அருட்ஜோதி சக்தி அன்னையின் மூலம் நம்மை நேரடியாகத் தேடி வருகிறது. அந்நாட்களில் தியானம் செய்வது அதிக யோகப் பயனைத்தரும். இந்த அரிய உயரிய, அருட் ஜோதி சக்தி, அன்னை புதிதாகிய உருவாக்கிய உலக மாநகரமான ஆரோவில்லிலும் அதன் பஞ்ச பூதங்களிலும் ஊடுருவிப் பரவி நிலைத்துள்ளது. யுனஸ்கோ, யுனோ முதலிய ஐக்கிய நாட்டு சபை ஸ்தாபனங்களின் படங்களைத் தொட்டுணர்ந்தால் இதே சக்தி அங்கும் விளங்கி உலக ஒற்றுமையை வளர்த்துக் கொண்டிருப்பதை எளிதில் உணரலாம்.

ஆனால் இப்படத்தின் சக்தியை ஒருவாறு நம் அஞ்ஞான உடலும் கிரகித்துக் கொள்கிறது. இதற்கான ஒரு எளிய உபாயம் உள்ளது. இதை யாவரும் செய்யலாம். இப்படத்தின் மீது இடது கை நுனிவிரல்கள் தொடும்படி வைத்துக் கொண்டு உணவு, பானம், பழம் முதலியன ஒரு மாதம் சாப்பிட்டு வந்தால் அவை இச்சக்தியை ஏற்றுக் கொண்டு நம்முடலுக்கு தந்துவிடுகிறது. உடலும் நாளடைவில் இத்தெய்வீகமான தூல இறை சக்தியை உணவின் மூலம் கிரகித்துத் தேக்கி வைத்துக் கொள்கிறது. இவ்வாறு சாப்பிட்டு ஒரு மாதம் சென்று நம்முடலை இரண்டு மூன்று நிமிடம் தொட்டு பின்பு, அன்னை படத்தை மாறி மாறித் தொட்டால் நம்முடலின் சக்தியும் அன்னை உடலின் சக்தியும் சமமாக அல்லது கிட்டத்தட்ட சமமாக இருப்பதை உணரலாம். சக்தியின் அளவில் வித்தியாசம் தோன்றாது. ஆனால் ஆரம்பத்தில் அன்னையின் உடல் சக்தி அபரிமிதமாக இருப்பதை இதுபோல் தொட்டு உணரலாம். இவ்வாறு சாப்பிட்டால் உடல்நலம் பொதுவாகப் பெருகுகிறது. படத்தின் பாதுகாப்பிற்காக அதை பிளாஸ்டிக் உறையிட்டு உண்ணும் போது அதைத் தொட்ட வண்ணமாயிருந்து உண்ணவேண்டும்.

மனிதனுக்கு நல்ல மனத் தெளிவும், அழகும், நறுமணமும், ஒளியும், ஒளிநிறங்களும் உள்ளத்திற்கு உற்சாகமும், அன்பு இரக்கம் போன்ற உணர்ச்சிகளும், உடலுக்கு உறுதியும், தைரியமும், இன்னும் தியானசக்தியும், ஆன்மீக உணர்வும், மலர்ச்சியும், தீய குணங்களை மாற்றும் சக்தியும் — இவற்றையெல்லாம் நமக்கு அளித்து உதவும் பூக்களைப் பற்றி அன்னை விரிவாகச் சொல்லியுள்ளார். மலர்ந்த பூ வெளிப்படுத்தும் இரகசிய உண்மையை, அன்னை தம் ஆன்ம உணர்வாலும், தொட்டு, பார்த்து, முகர்ந்து அறிவதன் மூலமாகவும் நமக்குத் தெரிவிக்கிறார். சுமார் 1000 வகையான பூக்களின் குணங்களைத் தெரிவித்துள்ளார். முக்கியமான சிலவற்றை நாம் பார்த்தும், தொட்டும், முகர்ந்தும், இரு கைகளில் வைத்து தியானம் செய்தும் பயன் பெறலாம்.

மல்லிகையும், முல்லையும், புனிதத் தன்மை தந்து சமநிலையும் அளிக்கும். நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூவில் மறைந்து உள்ள அதன் சாரம், இரகசிய உண்மை, நாம் கிரகித்துக் கொள்ள முடிகிறது. நாட்டு ரோஜாப்பூ சரணாகதி பாவனை தந்து ஆண்டவர் பால் அன்பையும் தரும். ரோஸ் கலர் கலந்த சிவப்பு ரோஜா ஆண்டவரின் பேரன்பையே வெளிப்படுத்தும். துளசி பூவும் இலையும் பக்தி தரும். அரளிப்பூ மன அமைதியும் சரணாகதியும், ஆண்டவர் பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும். கப்பு சிவப்பு (கிரிம்சன்) அரளிப்பூ தவறான போக்கினைத் தடுத்து நல்வழிக்கு மாற்றிச் செலுத்தும். அல்லிப்பூ இலட்சுமியின் பொருள்வளம் தரும். ''வெள்ளைத் தாமரைப் பூ'' தெய்வீகப் பேருணர்வை, சைதன்ய சக்தியைத் தரும். மணமுள்ள கதிர் பச்சை அல்லது திருநீற்றுப் பச்சை என்னும் பூவும் காம்பும் ஆண்டவருடன் இணைத்து இன்பம் தரும். ஒளி ஊடுருவலை தம்மிடம் கொண்டு ஆஸ்டர் பூ நமக்கு ஆழ்ந்த தியானம் தந்து மனதில், உள்ளத்தில், உடலில், ஒளி ஊடுருவச் செய்யும். வெள்ளை ஆஸ்டர் பூ பொதுவாக அருள்மய ஒளி ஊடுருவலைத் தரும். வைலட் ஆஸ்டர் பூ பிராண சக்தியிலும், கத்தரிப்பூ நிற ஆஸ்டர் பூ இதயத்திலும், சிவப்பு ஆஸ்டர் பூ உடலிலும் அருள்மய ஒளி ஊடுருவலைத் தரும். சூரிய காந்திப் பூ விஞ்ஞான ஜோதியின் பால் நம்முணர்வைச் செலுத்தும். சண்பகப்பூ உள்ளப் பாடுகளை சீர்படுத்தி அமைக்கும். மணமுள்ள மருவு இலை ஆண்டவரின் சாந்நியத்தையும் உணர்வையும் தரும். பூவரசம்பூ உடல் நலம் தரும். மாம்பழம் தெய்வீக ஞானத்தின் சின்னம். இனிய கொடிமுந்திரி தெய்வீக ஆனந்தம் தரும்.

தெய்வீக குணங்களை சக்திகளை வாங்கிக் கொள்ளும் ஆற்றல் மனிதனை விட பூக்களுக்கு இயல்பாக எளிதாக உள்ளது, என்று அறிவித்து பூக்கள் மூலம் அன்னை தம் அருளை தம்மைப் பார்க்க வருபவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவினார்.

இப்பூக்களை அன்னை படத்தின் மீது வைத்துத் தொட்டும், பார்த்தும், முகர்ந்தும் யோகத்தின் பயன்களைப் பெறுவது எளிய உகந்த வழியாகும்; வழிபாடுமாகும். அன்னையின் சக்தி நமக்கு நேரடியாக பூக்களின் மூலம் எளிதில் வந்து அருளுகிறது. ஒரே வகையான பூக்களை உதாரணமாக, மல்லிகைப்பூ அல்லது அரளிப்பூ அல்லது ரோஜாப்பூ இருகைகளிலும் வைத்துக் கொண்டு சிறிது நேரம் தியானம் செய்தபின் அவற்றை அகற்றிவிட்டு தியானம் தொடர்ந்தால் அது மிக மிக ஆழமாக வலுவாக அமையும். தியானம் முடிந்த சமயம் மணமுள்ள மருவு இலை அல்லது, கதிர் பச்சை இருகையாலும் தொட்டு முகர்ந்தால், ஆண்டவரின் சாந்நியத்தை உணருவது எளிதாகும். அன்னை பூக்களைப் பற்றிச் சொல்லும் உண்மைகளை உணரலாம்.

தெய்வீக அன்னையை அன்புடன் நினைந்தும் உலகுக்கு அருட்ஜோதி கொணர்ந்த அருள் அன்னையே! எனக் கூப்பிட்டும், ''ஓம் ஆனந்த மயீ சைதன்ய மயீ சத்யமயீ பரமே', என்னும் மந்திரம் ஓதியும், கைகூப்பிய நிலையிலுள்ள அவரது படத்தைத் தொட்டு உணவு உட்கொண்டும், பூக்களைப் படத்தின் மீது வைத்தும் தொட்டும் முகர்ந்தும் — இவ்வாறு பல வழிகளில் அன்னையுடன் நேர்த் தொடர்பு கொண்டு அருளைப் பெறலாம். அருட்ஜோதி கொணர்ந்த அன்னைக்கு உலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

By Courtesy to AIR வானொலி உரை
17-11-86

அன்பளிப்பு : *சோலை ஸ்ரீ முருகன் தரும டிரஸ்ட்*